**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>**

**<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்.</u>**

**<u>அ.வ.எண்.</u> 209/16**

**2018ம் ஆண்டு 20.03.2018 பி.வா.சா.1**

**சாட்சியின் சாட்சியம் திரு.பி.கருணாநிதி, பி.எ.,பி.எல்.,கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கிருஸ்ணமூர்த்தி | **தொழில்** | |
| **த /பெ** | நாராயணசாமி | **கிராமம்** | |
| **வயது** | | **தாலுக்கா** | |
| **ஜாதி** | | **மாவட்டம்** | |
| **சமயம்** | | | |

குறுக்கு விசாரணை வாதி தரப்பில்

நான் 9 வது வரை படித்துள்ளேன். நான் கையெழுத்து ஆங்கிலத்தில் போடுவேன் . நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதில்லை. ஆனால் யாரேனும் கேட்டால் நிலம் வாங்கி கொடுப்பேன். நான் பகுதி நேரம் விவசாயம் பகுதி நேரம் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்கிறேன் என்றால் சரியல்ல. முழு நேர விவசாயம் செய்கிறேன். யாராவது கேட்டால் வாங்கி கொடுப்பேன். அரசியல் கட்சியில் உறுப்பினராக உள்ளேனா என்றால் இருக்கிறேன். எந்த கட்சி என்றால் திராவிடமுன்னேற்றகழகத்தில் உறுப்பினராக உள்ளேன். தேர்தலில் ஈடுபட்டுள்ளீர்களா என்றால் பஞ்சாயத்து தேர்தலில் நாதேகவுண்டன்பாளையத்தில் 1 வது வார்டில் போட்டியிட்டு தேர்வானேன். ஆனால் அது 2 அல்லது 3 தேர்தலுக்கு முன்பாக நடந்த தேர்தலில் தான் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். எனது கிராமத்திற்கு பக்கத்தில் அக்ராணம் என்ற கிராமம் உள்ளது என்றால் சரிதான். அந்த கிராமத்தை சேர்ந்த ரத்தினசாமி என்பவருடன் சேர்ந்து நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் அது உண்மையல்ல. ஆனால் அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரத்தினசாமியை தெரியுமா

என்றால் அவரை எனக்கு தெரியும். மேற்படி ரத்தினசாமியிடம் நான் ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கடன் வாங்கியிருந்தேனா என்றால் வாங்கியிருந்தேன் ஆனால் திருப்பி கொடுத்து விட்டேன். மேற்படி ரத்தினசாமி வாதி மன்மதகோபாலின் அண்ணன் வேலுச்சாமி என்பவருக்கு நல்ல பழக்கமானவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கிராமத்திலிருந்து பெதப்பம்பட்டிக்கு எவ்வளவு தூரம் என்பது தெரியாது. பெதப்பம்பட்டி பஞ்சாயத்து அலுவலகத்தில் வேலுச்சாமி எழுத்தராக வேலை செய்தார் என்றாலும் ரியல் எஸ்டேட் சம்பந்தமாக நானும் ரத்தினசாமியும் அடிக்கடி அவரை சென்று பார்ப்பது வழக்கம் என்றாலும் அது உண்மையல்ல. எனது கிராமத்திற்கு அருகில் அரசமரத்துபுதுர் என்ற கிராமம் உள்ளது. அங்கு எனது மைத்துனர் தங்கமுத்து பைனான்ஸ் தொழில் செய்கிறாரா என்றால் முதலில் செய்து வந்தார் தற்போது செய்வது இல்லை. சாட்சி தற்போது தனது மைத்துனர் பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை செய்ததாகவும் பைனான்ஸ் தொழில் செய்யவில்லை என்றும் சொல்கிறார். தற்போது எனது மைத்துனர் தங்கமுத்துவுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. சுமூகமாக உள்ளோம். எனது மைத்துனர் தங்கமுத்துவிடமிருந்து நான் கடன் பெற்று அதை திருப்பி செலுத்ததால் எங்களுக்குள் மனஸ்தாபம் உள்ளது என்றால் அது உண்மையல்ல. எனக்கு 4 ஏக்கர் தோப்பு உள்ளது என்றால் சரிதான். அதில் ரூ.42 லட்சம் செலவு செய்து ஒரு பங்களா கட்டியுள்ளேன் என்றால அது உண்மையல்ல ஒரு ஓட்டு வீடு தான் கட்டியுள்ளேன். 3 இரு சக்கர வாகனங்கள் உள்ளது. எனது தோப்பிற்கு சொட்டுநீர் பாசனம் அமைத்துள்ளேன். அது வங்கி கடன் பெற்று செய்தேன். பதிலுருரையில் நான் சொல்லியுள்ள கே.கிருஸ்ணசாமி என்பவருக்கு சொந்தமாக எத்தனை தென்னை மரங்கள் உள்ளது என்றால் சுமார் 5000 தென்னைமரத்திற்கு மேல் உள்ளது. 7000 தென்னைமரங்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரிந்து 5000 மரங்கள் உள்ளது. அவருக்கு 2 பெண்குழந்தைகள் 1 ஆண்குழந்தை உள்ளது என்றால் சரிதான். அவர்களில் ஒரு பெண்குழந்தையை சென்னை வருமானவரிஆணையருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றாலும் இன்னொரு பெண்ணை கோவையில மேயராக இருந்த கணபதி ராஜ்குமார் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றாலும் சரிதான். கிருஸ்ணசாமிக்கு சுமார் 77 வயது இருக்குமா என்றால் இல்லை 72

வயது என சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னால் அவர் சொன்னார். எனக்கு நாதேகவுண்டன்பாளையம் வடமலைபாளையகிராமத்தில் க.ச.எண்.506 1 பி யில் 1 ஏக்கர் 8 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். பக்கத்தில் உள்ள க.ச.எண்.506 எ 1 யில் உள்ள 1 ஏக்கர் 8 செண்ட் நிலம் எனது அண்ணன் சி.கிருஸ்ணசாமிக்கு பாத்தியபட்டது என்றாலும் அதை மேலே நான் சொன்ன கே.கிருஸ்ணசாமி கிரையம் பெற்றுவிட்டார் என்றாலும் சரிதான். எனது அண்ணன் சி.கிருஸ்ணசாமி அவரது மகள் திருமணத்திற்கு ரூ.4 லட்சம் கே.கிருஸ்ணசாமியிடம் கடன் வர்ங்கியிருந்தார் என்றாலும் அதை வட்டியுடன் திருப்பி செலுத்த முடியாத நிலையில் மேற்சொன்ன க.ச.எண். 506 எ 1 ல் கண்ட நிலத்தை எனது அண்ணன் அவருக்கு கிரையம் கொடுக்கும்படி ஆனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2007 ம்ஆண்டு ஜீலை மாதம் வாக்கில் தேதி ஞாபகமில்லை நான் மேற்சொன்ன கே.கிருஸ்ணசாமி என்பவரிடம் ரூ.10000 கடன் பெற்றேன் என்றால் சரிதான். அந்த தொகையை சுமார் 1 வருடம் கழித்து திருப்பி செலுத்தி விட்டேன். கடன் வாங்கியதற்கும் அதை திருப்பி செலுத்தியதற்கும் சாட்சிய ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு கடன் வாங்கிய போது எத்தனை பத்திரங்கள் கொடுத்தீர்கள் என்றால் பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை. ஆனால் ஒரு 50 ரூபாய் எழுதாத முத்திரைதாளிலும் ஒரு எழுதாத புரோநோட்டிலும் கையெழுத்து மட்டும் போட்டு கொடுத்தேன். வழக்கிற்க்காக முத்திரைதாளிலும் புரோநோட்டிலும் கையெழுத்து போட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் யாருக்காவும் யார் வேண்டுமென்றாலும் முத்திரை தாள் புரோநோட் வாங்கமுடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றிய விவரம் எப்போது தெரிய வந்தது என்றால் வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் எனக்கு தெரியும். அந்த வழக்கறிஞர் அறிவிப்பபை நான் 12.5.16 ம் தேதி பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பெற்றவுடன் நான் வாதியின் அண்ணன் வேலுச்சாமி அழைத்துக் கொண்டு போய் வாதியை நேரில் பார்த்து எவ்வளவு சீக்கிரம் பணத்தை திருப்பி செலுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் திருப்பி செலுத்தி விடுகிறேன் என சொன்னேன் என்றால் அது உண்மையல்ல. சொன்னபடி நான் திருப்பி செலுத்தாத நிலையில் நினைவூட்டும் விதமாக வாதி

எனக்கு அவரது வழக்கறிஞர் மூலம் இன்னொரு அறிவிப்பை அனுப்பினார் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பை பலமுறை தபால் மூலம் எனக்கு தெரிவித்தும் நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 12.5.16 ம் தேதி நான் வாதியின் அறிவிப்பை பெற்ற பிறகு அதை மறுத்து இதுவரை பதில்அறிவிப்பு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. 12.5.16 க்கு பிறகு 9.9.16 க்கு முன்பு வரை மேற்படி வழக்கில் சொல்லியுள்ள விவரங்கள் குறித்து காவல்துறையில் எதுவும் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. 9.9.16 ம் தேதி வழக்கிலிருந்து வந்த அழைப்பாணை பெற்ற பிறகு தான் நான் எனது வழக்கறிஞர் அறிவுரைபடி காவல்நிலையத்தில் போய் 17.10.16 ம் தேதி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். பிவாசாஆ.1 ல் கண்டுள்ள விவரங்களை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் எனக்கு எனது வழக்கறிஞர் சொன்னார். அந்த புகார் குறித்து எங்கு விசாரணை நடந்தது என்றால் திருப்பூர் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடந்தது. அங்கு கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். கே.கிருஸ்ணசாமியை அழைத்து விசாரிப்பதாக சொன்னார். அந்த புகார் மீதான விசாரணை காவல்துறையில் இன்னும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

காலஅவகாசம் கருதி குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டது.